# போக்குவரத்துத் துறை

## மானியக் கோரிக்கை எண். 48

## அறிவிப்புகள்

## 2017–2018

**எம்.ஆர். விஜயபாஸ்கர்**
போக்குவரத்துத் துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
**2017**

# போக்குவரத்துத் துறை
## அறிவிப்புகள்

---

1. **மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் மின்கலம் (Battery) மூலம் இயங்கக்கூடிய பேருந்துகள் அறிமுகம்.**

சென்னை மாநகரத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் சுற்றுபுறச்சூழல் தூய்மை மற்றும் மாசு கட்டுப்பாடு இன்றியமையாத ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் மின்கலம் (**Battery**) மூலம் இயங்கக்கூடிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும். இதனால் சுற்றுச்சூழலை மாசுபடுத்தக்கூடிய புகையானது முற்றிலும் தவிர்க்கப்படுவதோடு, உலகளாவிய தொழில்நுட்ப முன்னேற்றம் தமிழகத்தில் நடைமுறைக்கு வரும்.

**2. பணிமனைகளில் ஏடிஎம் வசதி.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான பணிமனைகளில் தகுதியான இடங்களில் வங்கிகளின் ஒப்புதலோடு அவர்களின் சொந்த நிதி மூலம் உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு ஏடிஎம் மையங்கள் செயல்பட ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் பொது மக்கள், பயணிகள் மற்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் பயனடைவதோடு மட்டுமல்லாமல் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

## 3. போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான இடங்களில் வணிக நடவடிக்கைகள்.

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான இடங்களில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** பயணிகள் மற்றும் பொது மக்கள் வசதிக்காக வணிக நடவடிக்கைகள் (Commercial Activitiies) மேற்கொண்டு, போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதல் வருவாய் ஈட்ட வழிவகுக்கப்படும்.

4. **போக்குவரத்துக் கழக ஓட்டுநர் பயிற்சி மையங்கள் மூலம் பொது மக்களுக்கு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி.**

அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர் பயிற்சி மையங்களில் இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் வைத்துள்ள பொது மக்களுக்கு தற்பொழுது பயிற்சி அளிக்கப்பட்டு கனரக வாகன ஓட்டுநர் உரிமம் (Heavy Transport Vehicle) பெற்றுத் தரப்படுகிறது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** இத்திட்டத்தினை நீட்டித்து போக்குவரத்துக் கழக ஓட்டுநர் பயிற்சி மையங்கள் மூலம் இனிவருங்காலங்களில் பொது மக்களுக்கு இலகுரக வாகன (Light Motor Vehicle) ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டு உரிமம் பெற்றுத் தரப்படும். இதனால் எதிர்காலத்தில் திறமை மிக்க ஓட்டுநர்கள் உருவாக வழிவகுக்கும்.

**5. குளிர்சாதன பேருந்துகளில் கம்பியில்லா மெய்நிலை (Wi-Fi) வசதி.**

தகவல் தொடர்பு என்பது தற்போது அனைத்து தரப்பு மக்களின் அன்றாட வாழ்வில் பெரும்பங்கு வகிக்கிறது. எனவே, பயணிகள் பேருந்துகளில் பயணம் செய்யும் போது தகவல் பரிமாற்றம் செய்வதற்கு ஏதுவாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அனைத்து அரசு போக்குவரத்துக் கழக குளிர்சாதன பேருந்துகளில் கம்பியில்லா மெய்நிலை (Wi-Fi) வசதி ஏற்படுத்தப்படும்.

**6. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணமில்லா பரிமாற்றம் (Cashless transaction) நடைமுறைப்படுத்தப்படும்.**

நேரடி பணப் பரிமாற்றங்கள் வெகுவாகக் குறைந்துவரும் இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில், பொது மக்கள் மற்றும் பயணிகள் விரும்பத்தக்க வகையில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் பணமில்லா பரிமாற்றம் (Cashless transaction) படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்.

**7. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கண்காணிப்பு கேமரா (CC TV) பொருத்துதல்.**

பயணிகளின், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் படிப்படியாக கண்காணிப்பு கேமரா (CC TV) பொருத்தப்படும். இதன் மூலம் சமூக குற்ற நடவடிக்கைகள் குறைவதோடு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

**8. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கைகள்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அனைத்து விதமான செலவினங்களும் ஆழ்ந்து பகுத்தாய்வு செய்யப்பட்டு சீரமைப்பு மற்றும் சிக்கன (Cost Rationalisation Exercise) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**9. அரசு போக்குவரத்து கழக பயிற்சி மையங்கள் மூலம் தனியார் பள்ளி மற்றும் கல்லூரிப் பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல்.**

பொது மக்கள் போக்குவரத்தில், ஓட்டுநர்களின் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி (Refresher Training) அளிக்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, தனியார் பள்ளி மற்றும் கல்லூரிப் பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கும் அரசு போக்குவரத்துக் கழக பயிற்சி மையங்கள் மூலம் கட்டணத்துடன் கூடிய புத்தாக்கப் பயிற்சி (Refresher Training) அளிக்கப்படும்.

**10. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான இடங்களில் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சில்லறை விற்பனை நிலையங்கள் (Retail outlets) அமைத்தல்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான தகுதியான 100 இடங்களில் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களின் பங்களிப்புடன் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சில்லறை விற்பனை நிலையங்கள் (Retail outlets) அமைக்கப்படும். இதன் மூலம் போக்குவரத்துக் கழங்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் மற்றும் வருவாய் மேம்படுத்தவும் வழி வகுக்கும்.

**11. அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் படுக்கை வசதியுடன் கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** இரவு நேரத்தில் நீண்ட தூரம் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் படுக்கை வசதியுடன் கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும்.

**12. கழிப்பறை வசதியுடன் கூடிய பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.**

அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட கழிப்பறை வசதியுடன் கூடிய இரண்டு பேருந்துகள் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** கழிப்பறை வசதியுடன் கூடிய பேருந்துகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்படும்.

**எம்.ஆர். விஜயபாஸ்கர்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**